# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## நிலையறி பரீட்சை – 2021

தரம் 6 | கத்தோலிக்க திருமறை | நேரம் -2 மணித்தியாலங்கள்

சரியான விடையினைத் தெரிவுசெய்க

1.கிறிஸ்தவர்களாகிய எமக்கு ஆராதனைக்குரிய நூல் எது
1. குர்ஆன் 2. பகவத்கீதை 3. திருவிவிலியம் 4. திரிபீடகம்

2.திருவிவிலியத்தில் புதிய ஏற்பாட்டிலுள்ள நூல்களின் எண்ணிக்கை
1. 66 2. 27 3. 46 4. 73

3. விடுதலைப் பயணத்தில் முக்கிய இடம் வகிப்பவர்
1. மோசே 2. ஆரோன் 3. யோசுவா 4. ஆபிரகாம்

4. மாற்கு நற்செய்தியின் அடையாளம்
1. மனிதன் 2. எருது 3. கழுகு 4. சிங்கம்

5. நற்செய்தி எழுதிய ஒரெ ஒரு புறஇனத்தவர்
1. மத்தேயு 2. லூக்கா 3. மாற்கு 4. யோவான்

6. சூரியன் சந்திரன் விண்மீன் படைக்கப்பட்ட நாள்
1. 5ம் நாள் 2. 3ம் நாள் 3. 6ம்நாள் 4. 4ம் நாள்

7.ஐந்நூலில் அடங்காத நூல்
1. தொடக்க நூல் 2. எசாயா நூல்
3. விடுதலைப் பயணம் 4. எண்ணிக்கை

8. "நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" இக்கூற்றோடு தொடர்புடையவர்
1. மரியாள் 2. மாத்தா 3. அன்னா 4. எலிசபேத்

9. தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையை கணக்கிடுமாறு பிறப்பித்தவர்
1. திபேரியுசீசர் 2. அகுஸ்துசீசர் 3. ஏரோது 4. பிலாத்து

10. நம்மில் வளர்த்துக் கொள்ளக் கூடிய நற்பண்புகளில் ஒன்று
1.பொறாமை 2. சுயநலம் 3. சினம் 4. கீழ்ப்படிவு

11. இயேசு நற்கருணையை ஏற்படுத்திய நாள்
1. பெரியவெள்ளி 2. பெரியசனி 3. பெரியவியாழன் 4. புதன்

12. குணமளிக்கும் அருளடையாளங்கள் முறையே
1. திருமுழுக்கு,ஒப்புரவு 2. நற்கருணை,குருத்துவம்
3. ஒப்புரவு,நோயிற் பூசுதல் 4. நோயிற் பூசுதல்,நற்கருணை

13. திருமுழுக்கில் கிறிஸ்துவை அணிந்துகொள்வதன் அடையாளமாக பயன்படுத்தப்படுவது
1. வெள்ளை ஆடை 2. நீர் 3. கிறிஸ்மாதைலம் 4. பாஸ்கா மெழுகுதிரி

14. முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவனாக சான்றுபகர்ந்து வாழும் பொறுப்பு எமக்குக் கிடைக்கும் அடையாளம்
1. திருமுழுக்கு 2. உறுதிப்பூசுதல் 3. நற்கருணை 4. குருத்துவம்

15. இயேசு பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை யாருக்கு வழங்கினார்
1. பேதுருவுக்கு 2. யோவானுக்கு 3. திருத்தூதர்களுக்கு 4. திருத்தொண்டர்களுக்கு

kalvi.lk

16. திருமணம் யாரால் ஆரம்பிக்கப்பட்டது
1. ஆதாமால் 2. ஆபிரகாமால் 3. இயேசுவால் 4. இறைவனால்

17. பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்படியுங்கள் என்பது குறித்துக் காட்டப்படும் திருவிவிலியப் பகுதி
1. சீராக் 3: 12-16
2. கொலோசையர் 3:20
3. எபேசியர் 6:12
4. 1கொரிந்தியர் 3:1

18. இறைவன் மோசேயிடம் பத்துக் கட்டளை கொடுத்த மலை
1. ஒரேப் 2. தபோர் 3. சீனாய் 4. ஏபால்

19. ஒரே இறைவனைமட்டும் ஆராதனைசெய்யவேண்டும் எனஉணர்த்தும் கட்டளை
1. 4வது கட்டளை 2. 3வது கட்டளை 3. 2வது கட்டளை 4. 1வது கட்டளை

20. கிறிஸ்தவ திருமறையின் முதன்மை படிப்பினையாய் கருதப்படுவது
1. அன்பு 2. தூய்மை 3. புரிந்துணர்வு 4. பொறுமை

(20*2=40)

## பகுதிII

விரும்பிய 6 வினாக்களுக்கு விடை தருக.

1. அ. திருவிவிலியத்தின் பிரதான இரண்டு பிரிவுகளையும் எழுதுக.
ஆ. ஐந்நூல் வேறு எப் பெயர்களால் அழைக்கப்படுகிறது.
இ. திருவிவிலியத்தை தூய்மையாகவும் புனிதமாகவும் பேண நீர் மேற்கொள்ளும் செயற்பாடுகள் ஐந்து தருக.
(2+3+5=10 புள்ளிகள்)

2. அ. ஆதிப் பெற்றோரின் பெயர்களை எழுதுக.
ஆ. கடவுள் படைத்த படைப்புக்களில் மூன்றை எழுதுக.
இ. இறைவன் படைத்த அழகிய படைப்பை நீர் பாதுகாக்கும் வழிகள் ஐந்து தருக.
(2+3+5=10 புள்ளிகள்)

3. அ. புகுமுக அருளடையாளங்கள் இரண்டு தருக.
ஆ. ஒருமுறை மட்டும் பெற்றுக் கொள்ளக் கூடிய அருளடையாளங்கள் மூன்று எழுதுக.
இ. அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வதனால் கிடைக்கும் அருள்கள் ஐந்து தருக.
(2+3+5=10 புள்ளிகள்)

4. அ. பணிவாழ்வின் அருளடையாளங்கள் இரண்டு தருக.
ஆ. குருக்களின் பணிகள் மூன்று எழுதுக.
இ. உமது அன்பார்ந்த பெற்றோர்மட்டிலுள்ள கடமைகள் ஐந்து எழுதுக.
(2+3+5=10 புள்ளிகள்)

5. அ. பத்துக் கட்டளைகள் எங்கேயாரிடம் கொடுக்கப்பட்டது.
ஆ. பத்துக் கட்டளைகளுள் மூன்றைஎழுதுக.
இ. பத்துக் கட்டளைகள் மட்டில் நீர் எவ்வாறுநடந்துகொள்வீர் எனஐந்து. செயற்பாடுகளைத் தருக.
(2+3+5=10 புள்ளிகள்)

6. அ. நற்செய்தி நூல்கள் இரண்டு எழுதுக.
ஆ. லூக்காவைப் பற்றி மூன்று வசனங்கள் எழுதுக.
இ. நற்செய்தி நூல்களைப் படிப்பதன் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் ஐந்து எழுதுக.
(2+3+5=10 புள்ளிகள்)

kalvi.lk

7. அ. இயேசுவைப் பார்க்கச் சென்ற ஞானிகள் கொடுத்த காணிக்கைப் பொருட்கள் இரண்டு எழுதுக.

ஆ இயேசு சிறுவயதில் வாழ்ந்த விதத்தில் இருந்து நீர் பெறும் முன்மாதிரிகைகள் மூன்று எழுதுக.

இ. இயேசுவின் பிறப்புவிழாவை அர்த்தமுள்ள முறையில் கொண்டாடும் விதங்கள் ஐந்து எழுதுக.

(2+3+5=10 புள்ளிகள்)

Education கல்வி அධ்‍யාපන

# GRADE 6-11

STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page